**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 27/2023** **Date:27.02.2026.**

**(PW1)- ஜெயசேகர்**

**2** முதல் **5, 8** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**

1. இந்த வழக்கில் நான் ஆஜாராகி சாட்சியம் அளிக்க அதிகாரம் அளிக்க பங்கு பேரவைக்கு உரிமையில்லை என்றாலும் எனவே வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாத ஆவணம் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது எனது பிராதில் பத்தி 1 ல் வழக்கு பட்டிகை சொத்து வா.சா.ஆ.3, 4, 5 ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் எந்த வழக்கின் தீர்புரை என்றால்அசல் வழக்கு எண் 691/1955 வழக்கின் தீர்புரையாகும், சர்வே எண் 226/13 ல் உள்ள 151 செண்ட் ஆலயத்திற்கு பாத்தியப்பட்டது என்று வழகங்கிய தீர்பாகும். நான் வா.சா.ஆ.3 படி தான் வழக்கு பட்டிகை சொத்து எனக்கு கிடைத்தது என்று குறிப்பிட்டுள்ளேனே தவிர வா.சா..ஆ. 2 படி கிடைத்தது என்று பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 மற்றும் 6 ஆவணம் எந்த வழக்கின் தீர்புரை என்றால் அ.வ.எண். 463/58 வழக்கு ஆகும். மேற்படி வழக்கு படிதான் எனக்கு இந்த தாவா சொத்து உரிமைப்பட்டதாக இந்த பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அதை தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டது. மேற்படி அ.வ.எண். 463/58 வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் மேற்படி வழக்கு நாங்கள் தாக்கல் செய்யவில்லை. மேற்படி வழக்கில் முதல் பிரதிவாதி ஆயர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 1ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான்.

3. அ.வ.எண். 463/1958 ன் அடிப்படையில் ஆயருக்கு சொத்தில் எந்த உரிமையும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும வா.சா.ஆ.8 ஆவணம் (பட்டா) யாருடைய பெயரில் உள்ளது என்றால் கோட்டார் ரோமன் கத்தோலிக்க பள்ளி வகைக்கு காப்பாளர்/தற்போதைய தலைவர். பள்ளி என்றால் பள்ளி கூடத்தை குறிக்கும் என்றால் சரியல்ல, அந்த காலத்தில் மலையாளத்தில் கோவிலை பள்ளி என்று அழைப்பார்கள். மேற்படி வா.சா.ஆ.8 ஆவணம் எனக்கு எப்போது வழங்கப்பட்டது என்றால் 16.07.2020 வழங்கப்பட்டது.

4. தமிழ்நாட்டில் வருவாய் துறை ஆவணங்களில் கோவிலை பள்ளி என்று குறிப்பிடுவது

கிடையாது என்றால் சரிதான், 1942 ல் வாங்கிய சொத்து என்பதாலும் நாங்கள் பட்டாவில் பெயர் திருத்தம் செய்யாமல் இருப்பதாலும் அவ்வாறு உள்ளது. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணங்களில் கோவில் என்று தான் குறிப்பிடபட்டுள்ளதே தவிர பள்ளி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது ஊரின் ஆலயத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அனைத்து சொத்துகளும் ஆயர் பெயரில் தான் வாங்குவார்கள். ஆயர் இவ்வழக்கின் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். ஆயர் இந்த வழக்கை நடத்துவதற்கு எந்த அதிகாரமும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான், பங்கு தந்தைக்கு தான் அதிகாரம் கொடுத்துள்ளார்கள்.

5. பங்கு தந்தைக்கு அதிகாரம் கொடுத்தை காட்டக்கூடிய எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தீர்புரைகள் அனைத்தும் ஆயர் ஆஞ்சிசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மற்ற ஆயர்களின் பெயருக்கு மாறவில்லை என்றால் சரிதான். பட்டா மேற்படி ஆஞ்சிசாமி பெயரில் இல்லை என்றால் சரிதான், அறக்கட்டளை சொத்து என்பதால் பெயர் மாறி வரும். ஆலய சொத்திற்கு முழு உரிமையாளர் ஆயர் என்றால் சரிதான். ஆயர் தாவா சொத்தை எனது ஊர் ஆலயத்திற்கு கொடுத்தற்க்கு நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது ஆலயம் ஆயரின் முழு கட்டுப்பட்டில் உள்ளது என்றால் சரிதான். ஆயரை தவிர்த்து பங்கு பேரவைக்கோ பங்கு தந்தைக்கோ தாவா சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக 09.03.2026. தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**